number of Law Officers and accommodation had to provided for then too. Hence the chamber accommodation provided in the main High Court building, which had been temporarily allotted to senior Advocates, had to be resumed. With a view to provide alternative accommodation to Senior Advocates who had been given accommodation in the main High Court building, some law chambers in the Advocates block had to be resumed from some advocates.

The High Court has provided alternative accommodation as far as possible and it is also considering proposals for the construction of Law chambers.

6. அரசினர் மசோதாக்கள்.

மு.ப. 11–00

(அ) 1969-ம் ஆண்டு, சிவில் நடைமுறை சட்டக்கோவை (தமிழ்நாடு திருத்த) மசோதா.

THE HON. THIRU S. MADHAVAN : Sir I move—

that leave be granted to introduce the Code of Civil Procedure (Tamil Nadu Amendment) Bill, 1969.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நான் இம் மசோதாவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம் மசோதா அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

4. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

(ஆ) கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலாளர் சிக்கல்கள்குறித்து திரு. கணபதியாப் பிள்ளை விசாரணைக் குழுவின் அறிக்கைமீது விவாதம்—தொடர்ச்சி.

திரு. இராம. அரங்கண்ணல்: பேரவைத் தலைவர் அவர்களே, நான்கு மாத காலத்தில் நல்லதொரு பிரச்சினையைப்பற்றித் தீவிரமாகப் பரிசீலனை செய்து, தெளிவான விளக்கத்தை நமக்கெல்லாம் வழங்கியிருக்கிற திரு. கணபதியா பிள்ளை கமிஷனை நான் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட பிரச்சினையில் ஒரு கமிஷனை நியமித்து அதன் வாயிலாக உண்மைகளைப் பெறவேண்டுமென்ற ஒரு முடிவினை எடுத்த திராவிட முன்னேற்றக் கழக அரசினைப் பாராட்டுகிறேன். அரசின் நடவடிக்கையைக் கண்டு நான் மகிழ்கிறேன். இந்தக் கமிஷனுடைய அறிக்கையைப்பற்றி, இந்தக் கமிஷனுடைய நியமனம்பற்றிப் பேசப்பட்ட நேரத்தில், கூட்டணியில் இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சி இழுத்த இழுப்பிற்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் செல்வதாகக் குற்றச்சாட்டுகள் சொல்லப் பட்டன. ஆனால் யாருடைய கட்டாயத்திற்காகவோ அல்லது